**<u>புனர்வாழ்வுப் பணியகத்தின் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது மற்றும் விண்ணப்பக் கட்டணம் செலுத்தும் போது பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்கள்</u>**

**<u>விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர்</u>**

விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர் தயவுசெய்து பின்வரும் அறிவுறுத்தல்களைக் கவனியுங்கள்.

- நீங்கள் விண்ணப்பப் படிவத்தை தரவிறக்கம் செய்து (Download) பூர்த்தி செய்தல் வேண்டும்.
- விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர், நீங்கள் விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் பதவிக்குரிய இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக வாசித்துப் புரிந்துகொண்ட பின்னர் விண்ணப்பத்தை பூர்த்தி செய்யவும்.
- நீங்கள் பல பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின், அவற்றுக்காக தனித்தனியே விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றக் கடமைப்பட்டுள்ளனர்.
- விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்புச் செய்வதானது, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் புனர்வாழ்வுப் பணியகத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறைக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

**<u>விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது</u>**

- விண்ணப்பப் படிவத்தை மூன்று மொழிகளிலும் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) தரவிறக்கம் செய்துகொள்ள முடியும் என்பதுடன், உங்களுக்கு இலகுவான மொழியில் பூர்த்தி செய்ய முடியும்.
- முதலில், நீங்கள் உள்ளக விண்ணப்பதாரியா / வெளிவாரி விண்ணப்பதாரியா என்பதை சரியாகத் தேர்ந்தெடுக்கவும்.
- இங்கு புனர்வாழ்வுப் பணியகத்தின் உள்ளக ஊழியர்கள் மாத்திரம் உள்ளக விண்ணப்பதாரர் ‘Internal Applicant’ வகைப்படுத்தலில் அடங்குவர்.
- ஏனைய சகல விண்ணப்பதாரர்களும் வெளிவாரி விண்ணப்பதாரர் ‘External Applicant’ ஆவர்.
- இரண்டாவதாக, நீங்கள் ஆட்சேர்ப்புக்கான பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய தேவை ஏற்படும் பட்சத்தில், தோற்ற எதிர்பார்க்கும் மொழியைச் சரியாகத் தேர்ந்தெடுக்கவும். (ஒரு மொழிக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.)
- மூன்றாவதாக, விண்ணப்பப் படிவத்திலுள்ள சகல விபரங்களையும் சரியாகப் பூர்த்தி செய்தல் வேண்டும்.
- நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை சரியாகக் குறிப்பிடல் வேண்டும்.
- பரீட்சை அனுமதி அட்டை / நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் இலக்கம் 06 இல் நீங்கள் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். (நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் போது கடிதங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி)

**விண்ணப்பக் கட்டணம்**

- புனர்வாழ்வுப் பணியகத்தின் உள்ளக விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்பதுடன், ஏனைய சகல வெளிவாரி விண்ணப்பதாரர்களும் ரூபா 500/- ஆன விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்துவது கட்டாயமாகும்.

- நீங்கள் பல பதவிகளுக்கு விண்ணப்பித்திருப்பின், குறித்த ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பக் கட்டணங்களைச் செலுத்தல் வேண்டும்.

- ”Bureau of commissioner General of Rehabilitation” என்ற பெயரில் பேணிவரப்படுகின்ற, இலங்கை வங்கியின் போரளை விசேடத் தரக் கிளையின் (Borella Super Grade Branch) இலக்கம் 0007042763 என்ற கணக்கிற்குப் பணத்தைச் செலவுவைத்த பின்னா் (இணையவழி மூலமாகவோ அல்லது CDMA மூலமாகவோ இக்கணக்கிற்குப் பணத்தைச் செலவு வைக்க முடியும்.) பண வைப்புப் பற்றுச்சீட்டின் (Deposit slip) ஒரு பிரதியை உங்கள் வசம் வைத்துக் கொண்டு, அதன் மூலப் பிரதியின் மேல் பகுதியில், நீல நிறப் பேனாவை மாத்திரம் பயன்படுத்தி உங்களின் பெயரையும், நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியையும் தெளிவாகக் குறிப்பிட்டு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும்.

- விண்ணப்பக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

- விண்ணப்பப் படிவத்தில் ‘‘விண்ணப்பக் கட்டணம் செலுத்தும் விபரம்’’ பற்றிய பகுதியை சரியாகப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

    - Bank Name - நீங்கள் பணம் செலுத்திய வங்கியின் பெயர்
    - Branch - பணம் செலுத்திய வங்கிக் கிளை
    - Payment date – செலுத்திய திகதி
    - Account Number - இணையவழி மூலம் பணம் செலுத்தியிருந்தால் மேற்படி கணக்கு இலக்கம் (CDMA அல்லது வங்கி மூலம் செலுத்தியிருந்தால் அந்த இலக்கம்)
    - Transaction ID / Reference No (if applicable) - இணையவழி மூலம் பணம் செலுத்தியிருந்தால் அதன் அச்சிடப்பட்ட இலக்கத்தையும், CDMA மூலம் பணம் செலுத்தியிருந்தால் அதன் அச்சிடப்பட்ட இலக்கத்தையும் குறிப்பிடவும்.

**விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்த பின்னா்**

- விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்த பின்னர் விண்ணப்பக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை இணைத்து விண்ணப்பிக்கும் சான்றிதழ்களுடன் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**<u>வன்பிரதி மற்றும் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்தல்</u>**

- அரச திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் / நியாயாதிக்க சபைகளில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள், குறித்த நிறுவன / திணைக்களத் தலைவரின் அனுமதியுடன் விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும்.

- வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஆட்கள், தரவிறக்கம் செய்து பூர்த்தி செய்துள்ள விண்ணப்பப் படிவத்துடன், பின்வரும் சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்:

  (அ) பிறப்புச் சான்றிதழ்

  (ஆ) கல்விச் சான்றிதழ்கள்

  (இ) தேசிய அடையாள அட்டை

  (ஈ) கிராம சேவை உத்தியோகத்தர் சான்றிதழ் (தாமதங்கள் காணப்பட்டால் இச்சான்றிதழ் இன்றியும் விண்ணப்பிக்கலாம்)

  (உ) 03 மாதங்களுக்குள் பெறப்பட்ட நற்சான்றிதழ்கள் (மேலதிக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பதவிக்கு இது அவசியமற்றது.)

  (ஊ) விளையாட்டு மற்றும் ஏனைய திறமைகள்

  (எ) ஏனைய சான்றிதழ்கள்

- விண்ணப்பப் படிவத்தில் நீங்கள் வழங்கியுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என சான்றுப்படுத்தி, ஏதேனும் தவறான தகவல் பின்னர் கண்டறியப்பட்டால் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு அல்லது வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு அது காரணமாகலாம் என்பதை நீங்கள் புரிந்துகொண்டதாகக் குறிப்பிட்டு கையொப்பமிடல் வேண்டும்.
- விண்ணப்பிக்கும் பதவியைக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிட்டு, உரிய சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் பதிவுத் தபாலில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் ”புனர்வாழ்வுப் பணியகம், இல. 462/2, கடுவெல வீதி, கணஹேன, பத்தரமுல்ல” எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்:
- மேலுள்ள அறிவுரைகளுக்கமைய விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொள்ள CLICK HERE ஐப் பயன்படுத்துக.

**<u>விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவது தொடர்பாக</u>**

- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்யாதுள்ள விண்ணப்பங்கள் / பூரணமற்ற விண்ணப்பங்கள் / பண வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதி இணைக்கப்படாத விண்ணப்பங்கள் / தரவிறக்கம் செய்த (Download) விண்ணப்பப் படிவத்தைத் தவிர சமர்ப்பிக்கப்படும் வேறு விண்ணப்பங்கள் / உரிய சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் / விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஆகியன எவ்வித முன் அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். ஏதேனும் ஒரு காரணத்திற்காக விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படுமாயின், எக்காரணம் கொண்டும் அது மீண்டும் பரிசீலிக்கப்பட மாட்டாது.

- புனர்வாழ்வுப் பணியகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான ...................................... திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

## <u>பொதுவான விடயங்கள்</u>

- உள்ளகப் பரீட்சைக் குழுவினால் அடிப்படைத் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.
- மேலதிக விபரங்களை 0112883891 எனும் தொலைபேசி இலக்கம் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.